



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விராலிமலை மேற்கு ஒன்றிய பாக முகவர்கள் (BLA–2) ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட பொருளாளர் புதுக்கோட்டை துணை மேயர் எம்.லியாகத் அலி, ஒன்றிய செயலாளர் அ.இளங்குமரன் ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக மருத்துவரணி துணை செயலாளர் தஞ்சாவூர் துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி தேர்தலில் பாக முகவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஏ.பி.ஆர்.ராஜாங்கம், ராஜா, மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி, தேங்கனிப்பட்டி ராஜா உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பங்கேற்றனர்.

### பூண்டி.கே.கலைவாணன் தலைமையில்

# திருவாரூரில் சுற்றுச்சூழல் அணியினர் அறிமுக கூட்டம்

## ஒவ்வொருவரும் 5 மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க தீர்மானம்!

திருவாரூர்,நவ. 6-

திருவாரூர் மாவட்டத்தில் தலைமை கழகத்தால் நியமனம் செய்யப்பட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கான புதிய சுற்றுச் சூழல் அணியினரின் அறிமுக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர்கள் மீனாட்சி சூர்யா பிரகாஷ், தலைவர் காசிராஜன், துணை அமைப்பாளர்கள் தினேஷ், மலர்மன்னன், கீதா உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,தீர்மானங்களை விளக்கி பேசினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் .

கழக செயல்பாடுகளை விரிவுபடுத்திட தி.மு.கழகத்தில் சார்பு அணிகளை உருவாக்கி, தமிழ்நாடு அரசியல் இயக்கங்களில் இதுவரை இல்லாத வகையில் புதிதாக சுற்றுசூழல் அணியினை அறிமுகப்படுத்தி ,அதில் இந்த ஆண்டு எங்களை அமைப்பார்களாக நியமித்த கழக தலைவர் திராவிட நாயகர் முதல்வர் தளபதி அவர்களுக்கும், தமிழ்நாடு அரசின் துணை முதல்வர் உதயநிதி அவர்களுக்கும் எங்கள் நன்றியினையும், பரிந்துரை செய்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களுக்கும் அங்கீகரித்த மாநில செயலாளர் கார்த்திகேய சேனாபதி நியமனம் செய்த மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் நன்றி தெரிவித்துக்கொள்ளுதல்.

ஒன்றிய நகர பேரூர் கழகத்தில் இன்று முதல் பொறுப்பேற்கும் பொறுப்பாளர்கள் சுற்றுசூழலை மேம்படுத்தும் முதல்பணியாக, அவரவர் ஐந்து மரக்கன்றுகளை நட்டு அதனை பராமரித்து காத்தல்,

தலைவர் தளபதி அவர்களின் எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் 200+என்கிற இலக்கினை எட்டும் வகையில் தேர்தல் பணிகளை மேற்கொள்வது,

வாக்காளர் சேர்த்தல் நீக்கல் முகாமை பயன்படுத்தி புதிய வாக்காளர்களை இணைத்து கழகத்தை வலுப்படுத்துதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கடலூர்மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி பெண்ணாடம் நகராட்சி பிரளயகாலேஸ்வரர் திருக்கோயில் ரூ.1,கோடியே 10,லட்சம் மதிப்பீட்டில் திருத்தேர் கட்டும் பணியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்தார். உடன் நல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவ. தியாகராஜன் பெண்ணாடம் நகர செயலாளர் எம். குமரவேல் கோனூர். மதியழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.





சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட .பாகமுகவர்கள்,. பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர். இரா இராஜேந்திரன் தலைமையிலும், தொகுதி பார்வையாளர். பார். இளங்கோவன் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள். மு கார்த்திகேயன். சி. ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள். பெ அசோகன். லோகநாதன், சா.சுப்பிரமணி. ஆர். சந்திரன், மாநகர நிர்வாகிகள். பா ரகுபதி, கே.ஆர். முருகன். வி கணேசன், எம். எம். ஷெரீப் பகுதி செயலாளர்கள். கே.டி.ஆர். தனசேகரன், ஆர். பி முருகன். எம்.ஏ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்

### 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது!

# சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் சாம்பியன்ஷிப் - 2024 போட்டி!

## துறை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 6-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நவம்பர் 5 முதல் 11-ம் தேதி வரை நடைபெறவுள்ள சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்-2024 போட்டியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா (04.11.2024) அன்று தொடங்கி வைத்தார் . இப்போட்டியின் மொத்த பரிசு தொகையான ரூ. 70 லட்சம் தமிழ்நாடு அரசால் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவை சேர்ந்த அர்ஜுன் எரிகைசி, தமிழ்நாட்டை சேர்ந்த அரவிந்த் சிதம்பரம், அமெரிக்காவை சேர்ந்த லெவோன் ஆரோனின் உள்பட 8 சர்வதேச மற்றும் இந்திய வீரர்களும், சேலஞ்சர்ஸ் பிரிவில் தமிழ்நாட்டை சேர்ந்த கார்த்திகேயன் முரளி, வி. பிரணவ், எம். பிரனேஷ் மற்றும் ஆர். வைஷாலி போன்ற 8 இந்திய கிராண்ட்மாஸ்டர்கள் விளையாடவுள்ளார்கள். மாஸ்டர்ஸ் பிரிவு போட்டியில் வெற்றிபெறுவோருக்கு ரூ. 15 லட்சம், சேலஞ்சர்ஸ் பிரிவு போட்டியில் வெற்றிபெறுவோருக்கு ரூ. 6 லட்சம் பரிசு தொகையாக வழங்கப்படும்

இப்போட்டியினை நேரடியாக காண குறிப்பிட்ட அளவிலான இருக்கைகள் பதிவு செய்யப்பட்ட செஸ் அகாடமி மாணவ-மாணவியருக்கு இலவசமாக பார்க்கும் வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பொது மக்கள் பார்வையிட நாள் ஒன்றுக்கு ரூ.100 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, அனுமதி டிக்கெட்டை BookMyShow இணையத்தளத்தின் மூலமாகவோ (https://in.bookmyshow.com/sports/chennai-grand-masters-2024/ET00418069) அல்லது கீழ்க்காணும் QR குறியீடு மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியை தங்களுக்கு விருப்பமான தேதிகளில் இலவசமாக காண செஸ் அகாடமிகள் anshika@mgd.one & cc srinath@mgd.one என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பி னர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி போட்டியில் கலந்துகொள்ளும் வீரர், வீராங்கனைகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.






கோயம்புத்தூர் மாவட்டம்

தகவல் தொழில்நுட்பக் கட்டடம் திறப்பு விழா

மற்றும்

மாபெரும் நூலகம் - அறிவியல் மையம் அடிக்கல் நாட்டு விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



8 தளங்களுடன், 2,94,382 சதுர அடி பரப்பளவில்
புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டடம்

நாள் : 5.11.2024, செவ்வாய்க்கிழமை, நேரம் : நண்பகல் 12.00 மணி
இடம் : விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்




8 தளங்களுடன், 1,98,000 சதுர அடி பரப்பளவில்
மாபெரும் நூலகம் - அறிவியல் மையம்

நாள் : 6.11.2024, புதன்கிழமை, நேரம் : காலை 9.45 மணி
இடம் : அனுப்பர்பாளையம், கோயம்புத்தூர்

செ.ம.தொ.இ./1118/வரைகலை/2024

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

நா. முருகானந்தம், இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in/

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009